பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆவணி 12 வியாழக்கிழமை (28-8-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 262

# புளியங்குளத்தில் மீண்டும் கடும் சமர்

# படையினரின் யுத்த டாங்கி அழிப்பு!

## 10 புலிகள் களப்பலி என அறிவிப்பு!!

வவுனியா, ஒகஸ்ட் 28

நேற்று முன்தினம் புளியங்குளத்தில் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் மீண்டும் கடும் சமர் மூண்டது. புளியங்குளம் சந்தியை நோக்கி நகர முயன்ற படையினரை புலிகள் இரு இடங்களில் வழி மறித்துத் தாக்கினர்.

இந்தச் சண்டைகளின் போது படையினரின் ஒரு யுத்த டாங்கி முற்றாக அழிக்கப்பட்டதாகவும், மற்றும் ஒரு டாங்கி சேதம் அடைந்ததாகவும், தமது தரப்பில் 10 புலிகள் களப்பலியானதாகவும் "புலிகளின் குரல்" வானொலி நேற்று இரவு தெரிவித்தது.

நேற்று முன்தினம் காலை 11-00 மணி அளவில் புளியங்குளத்துக்குக் கிழக்கே படையினர் தமது நகர்வை ஆரம்பித்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

புலிகள் மோட்டார்கள் மற்றும் ஆர். பி. ஜி. துப்பாக்கிகள் கொண்டு தாக்குதல் நடத்தினர்.

படையினரின் நகர்வைத் தடுத்து நிறுத்த புலிகளால் பெருமளவு கண்ணிவெடிகள் புதைத்து வைக்கப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சண்டைகளில் 5 படையினர் கொல்லப்பட்டனர் என்றும் 3 அதிகாரிகள் உட்பட 23 படையினர் காயம் அடைந்தனர் என்றும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

ஆனால் புலிகளின் குரல்

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## கடந்தவாரம் நிகழ்ந்த மோதலில் புலிகள் தரப்பில் 56 பேர் இழப்பு

வவுனியா, ஒக. 28

கடந்த 20 ஆம் திகதி புளியங்குளத்தை நோக்கி முன்னேற முயன்ற படையினருடனான மோதலில் தமது தரப்பில் 56 பேர் களப்பலியானார்கள் என்று ''புலிகளின் குரல்'' வானொலி தெரிவித்தது.

இந்தச் சண்டையின்போது படையினரின் ஒரு டாங்கி முற்றாக அழிக்கப்பட்டது என்றும் —

இரு டாங்கிகள் முற்றாகச் சேதமாக்கப்பட்டன என்றும் ''புலிகளின் குரல்'' மேலும் தெரிவித்தது. [இ-164-3]

## 'தராகி' கப்பல் புறப்பாடு தாமதம் பயணிகள் காங்கேசனில் தரிப்பு!

மன்னார் செல்லும் 'தராகி' கப்பலில் பயணம் செய்ய காங்கேசன்துறை சென்ற பயணிகள் அங்கு தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

'தராகி' கப்பலில் செல்வதற்காக நேற்று முன்தினம் 124 பயணிகள் காங்கேசன்துறை சென்றனர்.

கப்பல் புறப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ள காரணத்தால் அவர்கள் காங்கேசன் துறையிலேயே தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறையில் தரித்து நிற்கும் கப்பல் இன்று இந்தப் பயணிகளை ஏற்றிக் கொண்டு மன்னாருக்குச் செல்லும் என்றும்—

திருகோணமலைக்கு தமிழ்த்தினப் போட்டி மற்றும் விளையாட்டுப்போட்டிக்குச் சென்று நிர்க்கதி நிலையில் இருந்து மன்னார் வந்துள்ள 90 மாணவர்கள் இக்கப்பலில் இன்று யாழ்ப்பாணம் திரும்புவர் என்றும்— தெரிவிக்கப்பட்டது. (இ-3-150 )

## முச்சந்தி முரளி



கப்பல்களுக்கு மட்டுமல்ல பயணிகளுக்கும் கஷ்ட காலம் போல......!

## மோட்டார் தாக்குதல்

மட்டக்களப்பு, ஒக. 28

வாழைச்சேனை துறைமுகப் பகுதி இராணுவ காவல் நிலையம் மீது நேற்றிரவு 7.45 மணிக்கு விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத் தாக்குதலில் இராணுவத்தினர் ஒருவர் உயிரிழந்தார்.

இதையடுத்து இரு பகுதிக்கும் இடையில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் 3 பொதுமக்கள் காயமடைந்தனர்.

[இ-3-21]

## துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் 3 பெண்களின் சடலங்கள்

### யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஒக. 28

மானிப்பாய், சங்குவேலிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றதாகக் கூறப்படும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில், உயிரிழந்ததாக மூன்று பெண்களின் சடலங்கள், சுன்னாகம் பொலீஸாரால் நேற்று முன்தினம் மாலை யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

இறந்தவர்களில் சங்குவேலியைச் சேர்ந்த வீரசிங்கம் செல்லமுத்து (வயது 56) என்ற பெண் அடையாளங் காணப்பட்டுள்ளார். இரு சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கே அனுப்பக் கோரி திருமலையில் ஊர்வலம்

### பெண்கள் உண்ணாவிரதப் பயமுறுத்தல்

திருகோணமலை, ஒக. 28

யாழ்ப்பாணம் செல்ல கப்பல் வசதியின்றி திருகோணமலையில் நிர்க்கதி நிலையில் உள்ள மக்கள் நேற்று ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

நூற்றுக்கு மேற்பட்டவர்கள் ஊர்வலமாகச் சென்று திருகோணமலை ஈ. பி. டி. பி. அலுவலகத்தில் மகஜர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. நா. பிரதிநிதி யாழ். வந்தார்

யாழ்ப்பாணம், ஒக. 28

மனித உரிமைகளுக்கான ஐ. நா. ஆணைக்குழுவின் விசேட தொடர்பாளர் பார்க்வலி நிடியே நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தில் நேற்று அவர் பல சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடினார்.

பொதுவாக குடாநாட்டில் மனித உரிமைகள் மீறப்படுவது குறித்தும்—

குறிப்பாக நீதிமன்ற விசாரணையின்றி ஆள்கள் மரண தண்டனைக்கு உள்ளாக்கப்படுவது குறித்தும் —இவர் இங்கு ஆராய்வார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இன்று அவர் மேலும் பலரைச் சந்தித்து கலந்துரையாடல்கள் நடத்துவார். (இ-3)

# அரசிடமுள்ள தீர்வுத்திட்டம் குறித்து தமிழ் மக்களுக்கு எதுவும் தெரியாது

## வெளிநாட்டுப் பத்திரிகையாளரிடம் ஆயர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 28

''அரசின் தீர்வுத் திட்டம் குறித்து தமிழ் மக்களுக்கு எதுவுமே தெரியாது. அப்படி ஒரு தீர்வுத் திட்டம் கொண்டுவரப்படுமேயானால் அது தமிழ் மக்களினதும் விடுதலைப் புலிகளினதும் அங்கீகாரத்தைப் பெற வேண்டும். இல்லாவிடில் அது அரசாங்கம் தானே தீர்மானித்து நிறைவேற்றிய ஒன்றாகவே அமைந்து விடும்''

தம்மைச் சந்தித்த வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களிடம் யாழ். ஆயர் அருட்திரு. தோமஸ் சௌந்தரநாயகம் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழர்களின் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வுப் [illegible] ளதே! இது சமாதானத்துக்கு வழி வகுக்காதா? என்று பத்திரிகையாளர்கள் யாழ். ஆயரிடம் கேட்டபோதே, அது குறித்து தமிழ் மக்களுக்கு எதுவுமே தெரியாது என்று ஆயர் பதில் அளித்தார்.

''வொய்ஸ் ஒவ் அமெரிக்கா'' வின் தென்கிழக்காசிய பிரிவுத் தலைவர் டக்ளஸ் பக்ஸியன் மற்றும் ''த ரைம்ஸ் ஒவ் லண்டன்'' பத்திரிகையின் தென்கிழக்காசியப் பிராந்தியச் செய்தியாளர் கிறிஸ்தோபர் தோமஸ் இலங்கை வெளியுறவு அமைச்சைச் சேர்ந்த 8 பேர் ஆயருடனான சந்திப்பில் கலந்து கொண்டனர்.

''மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும். அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் ஒருவர் மீது மற்

(8ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சபாபதியார் அப்பாப்பிள்ளை காசிநாதர்

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதியார் அப்பாப்பிள்ளை காசிநாதர் அவர்கள் 26 - 08 - 97 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற கா. புஸ்பகாந்தியின் அன்புக் கணவரும், இராஜேஸ்வரன், ஈஸ்வரி, இரவீந்திரன், இரத்தினேஸ்வரன், கணேந்திரன், உமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், பத்மினி, சிவகுமாரன், மல்லிகாதேவி, நிரஞ்சன், லோகநாயகி ஆகியோரின் மாமனாரும், பிரியதர்சினி, சசிகுமார், கேதீஸ்வரன், நிரோசன், தயாளன், உதயவதனி, கிரிகரன் ஆகியோரின் பேரனாரும், சம்பந்தனின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 28- 08- 97 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சி. ஈஸ்வரி
(மகள்)

உடுவில் றோட்,
பக்கஸ் லேன்,
மானிப்பாய்.

(49242)

## சுப்பையா ஆறுமுகம் (அண்ணாச்சி)

(முன்னாள் பிரபல வர்த்தகர்)

மணல்தறை வீதியைச் சேர்ந்த சுப்பையா ஆறுமுகம் 27-8-97 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் குமுதச்சந்திரவதியின் அன்புக் கணவரும், சாவித்திரி, ஸ்ரீ முருகன் (லண்டன்), கீதா, கெங்கா, சரஸ்வதி (கனடா), வெங்கடரமணன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், வள்ளிநாயகி (லண்டன்), ஜெயகரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சரவணனின் (லண்டன்) பாசமிகு பாட்டனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 28-08-97 நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்,

தகவல்:
ஆ. வெங்கடரமணன்
(மகன்)

5A, மணல்தறை வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(49265)

## திருமதி மேரிப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

சூராவத்தையைச் சேர்ந்த திருமதி மேரிப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை 19-8-97 அன்று வவுனியாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும் றெஜீனா, றெஜீஸ், ஜெசீலா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பீற்றர் மற்றும் குணராஜா, தேவதாஸன், பபா, வசந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், அருட்தந்தை A. யேசுதாசன் அவர்களின் பெரியம்மாவும் ஆவார். இவரின் ஆன்ம சாந்திக்காக புனித திரேசாள் ஆலயத்தில் இன்று (28-8-97) வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

முகவரி:
சூராவத்தை,
சுன்னாகம்.

தகவல்:
அ. குணராஜா
(மருமகன்)

[49258]

## முருகேசு செல்லத்துரை

வேலணையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு செல்லத்துரை அவர்கள் 27 - 8 - 97 அன்று புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி முருகேசு தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற கனகம்மா (காந்தம்மா)வின் அன்புக் கணவரும், வடிவேலுவின் அருமைச் சகோதரனும், அன்னலட்சுமி (ஜேர்மனி), விஜயலட்சுமி, லங்காதேவி, தனலட்சுமி (வட்டக்கச்சி), சத்தியமூர்த்தி (கனடா), ஜெயலட்சுமி, கிருஷ்ணமூர்த்தி, தெட்சணாமூர்த்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற இராமச்சந்திரன் மற்றும் விவேகானந்தன், பிறேமச்சந்திரன், வரதராஜா (வட்டக்கச்சி), சித்திரா (கனடா), சௌந்தரராஜன், மனோகரி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 28 - 08 - 97 இன்று வியாழக்கிழமை பி. ப. 2.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. கிருஷ்ணமூர்த்தி (மூர்த்தி)
(மகன்)

216, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(49259)

## விமான, கப்பல் பயணிகளுக்கு

யாழ்ப்பாணம், ஓக. 28

வெளி மாவட்டங்களுக்கு விமான மூலம் செல்ல விண்ணப்பித்தவர்களில் பட்டியல் இலக்கம் 079 வரை அனுமதி கிடைத்துள்ளது என்றும்—

அவர்கள் தமது பதிவை மேற்கொள்ளலாம் என்றும்— யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

விமானத்தில் திரும்பிச் செல்லும் டிக்கெட்டில் வந்தவர்கள் தமது பயணத்தை மேற்கொள்ள காலை 7.00 மணிக்கே யாழ். ரயில் நிலையத்துக்கு வரவேண்டும் என்றும்

ஏனையோர் காலை 8.30 மணிக்கு வரலாம் என்றும்— மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம்—

காங்கேசன்துறைக்கும், மன்னாருக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை நாளை நடைபெறும் என்றும்—

பதிவு செய்தவர்களை காலை 7.00 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறும் — யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் கேட்டுள்ளது.

(இ-3)

## நெடுந்தீவு ப. நோ. கூ. ச. உழவு இயந்திரம்

நெடுந்தீவு, ஓக. 28

யாழ். மாவட்ட ஈ. பி, டி. பி. நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்டவரவு செலவுத்திட்ட நிதியில் இருந்து நெடுந்தீவு பல நோ. கூ. சங்கத்துக்கு இரண்டு சக்கர உழவு இயந்திரம் வழங்கப்பட்டது.

நெடுந்தீவு பல நோ. கூ. சங்கத்தில் நடைபெற்ற வைபவத்தில் ஈ. பி. டி. பி. தீவுப்பகுதி அரசியல் பொறுப்பாளர் என். மனோகரன் உழவு இயந்திரத்தை சங்கத்திடம் கையளித்தார்.

நெடுந்தீவு பொறுப்பாளர் காளிதாஸ் பல. நோ. கூ சங்க இயக்குநர் சபை உறுப்பினர்கள் உட்பட பலர் இவ்வைபத்தில் கலந்து கொண்டனர்.

(இ-111)


எமது நேற்றைய வெளியீடுகள்!

விக்னேஸ்
★ ராமன் அப்துல்லா
ஜெயராமின்
★ பெரிய இடத்து மாப்பிள்ளை

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.

[49262]



கோப்பாய் வாகன சுத்திகரிப்பு நிலையம்

எமது தொழில் ஸ்தாபனம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

[49249]



வியாபாரிகள் கவனத்துக்கு!

குளிர்சாதனப் பெட்டிக்குத் தேவையான
காஸ் சிலிண்டர்,
பிளாஸ்டிக் பொருள்கள், பேசன், வாளிகள்,
சோப் பெட்டிகள், தும்புத்தடி, போத்தல்கள்,
அடையாள அட்டைக் கவர் மற்றும் காகித உறைகள்,
வவுனியா Bag, நெற் Bag, ஐஸ்பழத் தடி,
முட்டை றே, பொலித்தீன், கதிரை பின்னும் வயர்,
ஐஸ் கோண், கல்வனைஸ்ட் வாளிகள்,
அயடீன் கலந்த உப்பு, தவிடு மற்றும்
ஏனைய பொருள்களுக்கு நாடவேண்டிய இடம்:

நியூ நாதன் றேடர்ஸ்,
213, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(49263)


## யாழ்ப்பாண மாநகர சபை

### நல்லூர் உற்சவம் தொடர்பான வீதித்தடை பற்றிய அறிவித்தல்

நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவத்தின் போது நல்லூர் கோயில் சுற்றாடலில் வழக்கமாக மேற்கொள்ளப்படும் வீதித்தடை ஒழுங்குகள், மக்கள் போக்குவரத்தில் தற்போது எதிர்நோக்கும் இடர்பாடுகளைக் கருத்திற் கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இதுவரை நாள்களும் செயற்படுத்தப்பட்டன. ஆயினும் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் பக்தர்களின் தொகையினையும், விசேட திருவிழா நாள்களையும் கருத்திற் கொண்டு, இன்று **28 -08 - 97** ஆம் திகதி முதல் இறுதி ஆறு நாள்களும் பின்வரும் ஒழுங்கில் செயற்படுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டிருப்பதனால் மக்களின் முழுமையான ஒத்துழைப்பினை இது விடயத்தில் வேண்டி நிற்கின்றோம்.

1. **28-08-97, 29-08-97, 30-08-97** ஆகிய மூன்று நாள்களும் காலை 6-00 மணி தொடக்கம் 8-30 மணி வரையும்; மாலை 3-00 மணி தொடக்கம் 7-00 மணி வரையும்.
2. **31 - 08 - 97** தேர்த்திருவிழாவன்று காலை 6-00 மணி தொடக்கம் மாலை 7-00 மணி வரையும்.
3. **01-09-97** தீர்த்தோற்சவத்தன்று காலை 6-00 மணி தொடக்கம் 11-00 மணி வரையும்; பிற்பகல் 3-00 மணி தொடக்கம் 7-00 மணி வரையும்.
4. **02-09-97** பூங்காவனத் திருவிழாவன்று பிற்பகல் 3-00 மணி தொடக்கம் 7-00 மணி வரையும்.

அதிகாலையில் தடைமுகாம்கள் அமைக்கப்படுவதற்கு முன்னதாகவே முருகன் அடியார்கள் தமது துவிச்சக்கரவண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் கோயிலின் முன் மண்டபத்துக்கு அருகில் கொண்டு சென்று நிறுத்துவதை இந்நாள்களில் முற்றாகத் தவிர்த்து எம்முடன் ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 27 - 08 - 1997

(சி/1419)


'BOSCO INSTITUTE'
25, றக்கா வீதி,

AL 98 PAPER CLASSES & DAY CLASSES

| | | |
|---|---|---|
| விலங்கியல் | - | திரு. யதுநந்தனன் |
| தாவரவியல் | - | திரு. அன்ரன் |
| இரசாயனம் | - | திரு. ரூபன் |
| பௌதிகவியல் | - | திரு. ஸ்பெல்மன் |
| தூய / பிரயோகம் | - | திரு. சிவலோகன் |

ஆரம்பம்: 30-08-97 6.30 மணி
[நேர அட்டவணை மாணவர் வசதிக்கேற்ப வழங்கப்படும்.]

A/L 99 நடைபெறுகின்றது

(49267)


## வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்

### பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி பொதுக்கூட்டம் **30 - 08 - 97** சனிக்கிழமை காலை **9. 30** மணிக்குப் பாடசாலையில் நடைபெறும். உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் சமுகம் தரவும்.

வயாவிளான் ம. ம. வி.,
உரும்பிராய்.

ந. ஜெயகுமாரன்,
செயலாளர்.

(49260)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் ... நூலகம்.

## இந்தியாவின் ஆகாஸ் ஏவுகணை!

புதுடில்லி, ஒக. 28

முற்றிலும் சுதேசிய தொழிநுட்பத்தினாலேயே வடிவமைக்கப்பட்ட 'ஆகாஸ்' ஏவுகணைகளை எதிர்வரும் முதலாம்திகதி இந்தியா வெள்ளோட்டமிடும்.

'ஆகாஸ்' ஏவுகணைத் தளம் 5 ஏவுகணைகளை ஒரே நேரத்தில் 30 கிலோமீற்றர் தூரம் எடுத்துச் செல்லக் கூடியது.

எதிரிகளிடமிருந்து புறப்படும் ஏவுகணைகளைத் தாக்கி அழிக்கவும் இது ஆற்றல் படைத்தது என்று கூறப்படுகின்றது.

வளைகுடாப் போரின் போது அமெரிக்கா பயன்படுத்திய ஏவுகணைகளுக்கு நிகரானது ஆகாஸ் ஏவுகணை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(இ-5)

## உலக அரங்கில்

### அன்னை தெரேசா பிறந்த தினம்

கல்கத்தா, ஒக. 28

அன்னை தெரேசாவின் 87 ஆவது பிறந்த தினத்தை கல்கத்தாவில் உள்ள அவரது ஆச்சிரமத்தில் பெரும் எண்ணிக்கையானோர் நேற்று முன்தினம் கொண்டாடினர்.

''கடவுள் உங்களைக் காப்பாற்றுவார். ஏழை எளியவர்களுக்காக உதவி புரிவதுடன் பிரார்த்தனையும் புரியுங்கள். கடவுளால் கொடுக்கப்பட்ட பெறுமதிமிக்க அருட்கொடை தான் குடும்பம். அதன் அழகு அழிக்கப்படக் கூடாது''— என்று அன்னை தெரேசா தமது பிறந்த நாள் பிரார்த்தனையின் போது தெரிவித்தார்.

(ஐ)

### எதிர்க்கட்சி எச்சரிக்கை

டாக்கா, ஒகஸ்ட் 28

பங்களாதேஷின் பிரதான எதிர்க்கட்சியான தேசியக் கட்சி பெற்றோலியப் பொருள்களின் விலையேற்றத்தை எதிர்த்து நாடாளுமன்றத்துக்குள் நுழைந்து கலவரம் செய்யப்போவதாக எச்சரித்துள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தொடங்கவிருக்கும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரின் போது அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அது கூறியுள்ளது.

பெற்றோலியப் பொருள்களின் விலையைக் குறைக்கும்படி தாங்கள் விடுத்த வேண்டுகோளை அரசாங்கம் புறக்கணித்து வருவதாக பங்களாதேஷ் தேசியக்கட்சியின் தலைமைச் செயலாளர் தெரிவித்தார்.

(ஐ-5)

### இனவிருத்தித் தடை

லக்ஸம்பேர்க், ஒகஸ்ட் 28

பெல்ஜியம் நாட்டில் மன வளர்ச்சி குன்றியவர்களை இனவிருத்தி செய்யவிடாமல் தடைசெய்யும் அறுவைச் சிகிச்சைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆனால், இந்த அறுவைச் சிகிச்சைகள் நோயாளிகளைக் கண்காணிப்பவர்களின் ஒப்புதல் பெற்ற பின்னரே செய்யப்படுகின்றன என்று மக்கள் நலவாழ்வு அமைச்சு தெரிவித்துள்ளது.

இத்தகைய அறுவைச் சிகிச்சைகள் சுவீடனில் நிர்ப்பந்தமாகச் செய்யப்பட்டன என்று வெளியான தகவல்களை அடுத்தே பெல்ஜியம் இவ்வாறு அறிவித்துள்ளது.

(ஐ-5)

# அரசியலில் இருந்து டி. கிளார்க் ஒதுங்கினார்

தென்னாபிரிக்காவின் தேசியக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து எஸ். டபிள்யூ. டி. கிளார்க் ராஜினாமாச் செய்துள்ளார்.

தீவிர அரசியலில் இருந்து ஒதுங்கி அடுத்த தலைமுறைக்கு வழிவிடப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கேப்ரவுணில் பெருந் திரளான செய்தியாளர்கள் கூடியிருந்த மாநாடு ஒன்றில் டி. கிளார்க் இந்த அறிவிப்பை விடுத்தார்.

தென்னாபிரிக்காவின் வரலாற்றில் மிகவும் கடினமான கால கட்டத்தில் வெள்ளை இன அரசின் தலைவராக டி. கிளார்க் பணிபுரிந்தார்.

அவரது ஆட்சியிலேயே தென்னாபிரிக்காவில் இன ஒதுக்கல் கொள்கை முடிவுக்கு வந்தது. அதிபர் நெல்சன் மண்டேலா சிறையில் இருந்து விடுதலையானார். 1994 இல் முதன் முறையாக ஜனநாயகரீதியிலான தேர்தல் அங்கு நடைபெற்றது.

தேர்தலின் பின்னர் டி.கிளார்க்கினதும், தேசியக் கட்சியினதும் செல்வாக்கு வீழ்ச்சியுற்றது.

நிறவெறி ஆட்சிக்காலத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் அரசியல் குற்றச் செயல்களுக்காக டி. கிளார்க்கும், அவரது கட்சியினரும் இன்னமும் முழுமையாக மன்னிப்புக் கோரவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் இப்பொழுதும் எழுப்பப்பட்டு வருகின்றன.

தேசியக் கட்சித் தலைமைப் பதவியில் இருந்து டி.கிளார்க் விலகியதைத் தொடர்ந்து கட்சிக்குள் தலைமைத்துவத்துக்கான போட்டி ஏற்பட்டிருக்கிறது.

தென்னாபிரிக்காவில் நிற ஒதுக்கல் கொள்கையை முடிவுக்குக் கொண்டு வந்ததற்கான டி. கிளார்க்குக்கும், தற்போதைய அதிபர் நெல்சன் மண்டேலாவுக்கும் சமாதான நோபல் பரிசு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# சரணடைய வீரப்பன் புதிய நிபந்தனைகள்

சென்னை, ஒக. 28

சந்தனக் கடத்தல் வீரப்பன், தான் சரணடைவதற்குப் புதிய நிபந்தனைகளை விதித்துள்ளதாக தற்போது தகவல் வெளியாகி உள்ளது.

இதன்படி, தனது சிறைத் தண்டனை எக்காரணத்தைக் கொண்டும் எட்டு ஆண்டுகளுக்கு மேல் நீடிக்கக் கூடாது; இதன் பிறகு தான் சுதந்திரப் பிரஜையாக வாழ அனுமதிக்கப்பட வேண்டும், தான் எவ்வித விசாரணைக்கும் நீதிமன்றில் ஆஜராக முடியாது, தனது குடும்பத்தினர் மற்றும் சகாக்களின் மறுவாழ்வுக்கு தலா 50 லட்சம் ரூபா அளிக்கப்பட வேண்டும், வனப்பகுதிகளில் அமர்த்தப்பட்டுள்ள கர்நாடக அதிரடிப்படை உடனடியாக விலக்கிக் கொள்ளப்பட வேண்டும்.

இவற்றைச் செயற்படுத்த தமிழக, கர்நாடக முதலமைச்சர்களும், மத்திய உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தாவும் கையொப்பமிட்டு உத்தரவாதக் கடிதத்தை அளிக்க வேண்டும் என்பன வீரப்பனின் புதிய நிபந்தனைகள் ஆகும்.

இந்நிபந்தனைகள் குறித்த கருத்துக்களை 30 நாள்களுக்குள் வானொலி மூலம் தனக்கு அறிவிக்க வேண்டும் என்றும் வீரப்பன் கோரியுள்ளார்.

தமிழக கர்நாடக அரசுகள் தனது பாதுகாப்புக்கான எவ்வித உத்தரவாதத்தையும் இதுவரை தெளிவுபடக் கூறவில்லை என்றும் வீரப்பன் கூறியுள்ளார்.

வீரப்பனைச் சந்திப்பதற்காகச் சென்ற 'நக்கீரன்' ஆசிரியர் கோபாலுக்கும் வீரப்பனுக்குமிடையே பணயக் கைதிகளின் விடுதலைக்கு முன்பாக நடைபெற்ற மூன்றாவது பேச்சுவார்த்தைகளின் போது இந்நிபந்தனைகள் வெளியிடப்பட்டன.

சென்னையில் நேற்றுக் காலை நடைபெற்ற செய்தியாளர் கூட்டமொன்றில் வீரப்பனுடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தை விவரங்கள் அடங்கிய ஒரு மணிநேர வீடியோ கஸற்றை நக்கீரன் கோபால் செய்தியாளர்களுக்கு காண்பித்தார்.

(ஐ-5)

## எல்லைச் சண்டையை முடிவுக்கு கொண்டுவர

# அமெரிக்க மத்தியஸ்தத்தை இந்திய அரசு நிராகரித்தது!

புதுடில்லி, ஒக. 28

சர்ச்சைக்குரிய காஷ்மீர் எல்லையில் இந்தியாவுக்கும் - பாகிஸ்தானுக்கும் இடையே நடைபெற்றுவரும் மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதில் மத்தியஸ்தம் வகிக்க அமெரிக்கா தெரிவித்த யோசனையை இந்தியா நிராகரித்துவிட்டது.

பாகிஸ்தானுடனான சண்டை இருதரப்புப்பேச்சுக்கள் மூலம் மட்டுமே தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்று இந்திய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் புதுடில்லியில் தெரிவித்தார்.

இந்திய - பாகிஸ்தான் எல்லை மோதலுக்குத் தீர்வு காணும் வகையில், இரு நாடுகளும் கேட்டுக் கொண்டால் மத்தியஸ்தம் வகிக்க அமெரிக்கா விரும்புவதாக நேற்று முன்தினம் அமெரிக்க வெளியுறவு அமைச்சு தெரிவித்திருந்தது.

இதேவேளை — பாகிஸ்தானிய எல்லை மோதலால் அடுத்த மாதம் நடைபெறவிருக்கின்றஇரு தரப்புப் பேச்சுவார்த்தை பாதிக்கப்படாது என்று இந்திய பாதுகாப்பு அமைச்சர் முலாயன் சிங் யாதவ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை —

சர்ச்சைக்குரிய எல்லைப்பகுதியில் இருநாட்டுப் படையினரும் தொடர்ந்து மாறிமாறித் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

(ஐ-5)

### விமான ஓட்டிகள் அமெரிக்காவில் பற்றாக்குறை

வாஷிங்டன், ஒகஸ்ட் 28

அமெரிக்க விமானப்படையில் விமான ஓட்டிகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக விமானப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வியட்நாம் யுத்த காலத்தில் பயிற்சி பெற்ற பெரும்பாலான விமான ஓட்டிகள் ஒய்வுபெறுவதாலும்- இளம் விமான ஓட்டிகள் பலர் தனியார் விமானங்களில் அளிக்கப்படும் பெருந்தொகைப் பணத்தை விரும்பி அங்கு செல்வதாலும் - இந்தநிலை ஏற்பட்டுள்ளது என்றார் அவர்.

(ஐ-5)

## பெரியாரின் பாத்திரத்தில் நடிப்பதே எனதுஇறுதிஆசை!

### சிவாஜி கணேசன் சொல்கிறார்



திருவனந்தபுரம், ஒக. 28

புரட்சிவாதியும் பெரும் தலைவருமான ஈ. வே. ரா. பெரியாரின் பாத்திரத்தில் நடிக்க வேண்டும் என்பதே இன்றும் நிறைவேறாமல் உள்ள தமது ஒரே ஆசை என்று பிரபல தென்னிந்திய நடிகர் சிவாஜி கணேசன் தெரிவித்துள்ளார்.

திருவனந்தபுரத்தில் நடந்த செய்தியாளர் கூட்டம் ஒன்றில் தமது இந்த விருப்பத்தை சிவாஜி கணேசன் வெளியிட்டார்.

நூற்றுக்கணக்கான பாத்திரங்களில் தோன்றி சிறப்புற நடித்த சிவாஜி கணேசனுக்கு இந்தியாவின் அதி உயர்ந்த திரைப்படத்துறை விருதான தாதா சாகே பால்கே விருது வழங்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

சிவாஜிக்கு ஏற்கனவே பிரான்ஸ் நாட்டின் அதி உயர் விருதுகளில் ஒன்றான 'செவாலியார்' விருது வழங்கப்பட்டிருப்பதும் தெரிந்ததே.

தெலுங்கு, கன்னடம், மலையாளம் உட்பட 300-க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ள சிவாஜி கணேசன் தற்போது சில தமிழ்த்திரைப்படங்களில் நடித்துக்கொண்டிருக்கிறார்.

(ஐ)

## கொலைப் பட்டியலில் அமிதாப்

மும்பாய், ஒக. 28

இந்தியாவின் முன்னணி சினிமா கலைஞர்களான அமிதாப் பச்சன், லதா மங்கேஸ்கர் ஆகியோரின் பெயர்கள் மும்பாய் நகர பாதாள உலகக் கும்பலின் கொலைப்பட்டியலில் இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் இருவரும் உட்பட சினிமா கலைஞர்கள் எட்டுப்பேரை கொலை செய்வதற்குத் திட்டப்பட்டுள்ள திட்டம் குறித்து தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாகவும் பொலீஸார் தெரிவித்தனர். கொலை அச்சுறுத்தலை அடுத்து இவர்களது பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

(ஐ)

## பலஸ்தீனத்துக்கு உதவ 4 அரபு நாடுகள் தயார்

ஜெருஸலேம், ஒகஸ்ட் 28

இஸ்ரேலின் பொருளாதாரத் தடையால் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ள பலஸ்தீனத்துக்கு உதவி செய்ய நான்கு அரபு நாடுகள் முன்வந்துள்ளதாக பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேற்ஸ், சவூதி அரேபியா, அல்ஜீரியா, மொறேக்கோ ஆகிய நாடுகளே பலஸ்தீனத்துக்கு உதவ முன்வந்திருப்பதாக அரபாத் தெரிவித்தார்.

பலஸ்தீனத்தை நெருக்கடிக்குள் மாட்டிவிட்டிருக்கும் இஸ்ரேலை சமாளிப்பதற்கு அரபு நாடுகளின் உச்சி மாநாடு விரைவில் கூட்டப்பட வேண்டும் என்றும் அரபாத் வேண்டுகோள் விடுத்தார்.

(இ-5)

## பூமி வெப்பமடைவதால்

# துருவக் கரடிக் குட்டிகள் அழிவின் விளிம்பில்!

லண்டன், ஒக. 28

பூமி வெப்பமடைவதால் ஆயிரக் கணக்கான துருவக் கரடிக் குட்டிகள் அழியும் நிலையில் இருப்பதாக அபாய அறிவிப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

''கிறீன் பீஸ்'' சுற்றாடல் பாதுகாப்பு நிறுவனத்தின் குழு ஒன்று அண்மையில் துருவப்பகுதிகளுக்குச் சென்று திரும்பிய பின்னர் இந்த எச்சரிக்கையை வெளியிட்டிருக்கிறது.

புவியின் வெப்ப அதிகரிப்பினால் பனிக் குன்றுகள் உருகும் நிலை ஏற்பட்டுள்ளது. பனிக் குன்றுகளில் ஆழமான குழிகளுக்குள் வசிக்கும் இந்த கரடிக் குட்டிகள் இதனால் உரிய வளர்ச்சிப் பருவத்தை அடைவதற்கு முன்னரே வெப்பத்தைச் சந்தித்து உயிரிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

''கிறீன் பீஸ்' விஞ்ஞானிகள் குழு மேற்கொண்ட மற்றொரு ஆய்வின்படி கடல் பனிப்பாறைகளுக்கு அடியே வாழும் 'அல்கா' இனம் பனி உருகுவதனால் பாதிக்கப்படுவதால் அல்காவை உணவுக்காக நம்பிவாழும் உயிரினங்கள் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பி விளக்கு வெடித்து இரு சிறுமிகள் மரணம்!

## கம்பர்மலையில் சம்பவம்

நெல்லியடி., ஓக, 28

எரிந்து கொண்டிருந்த குப்பி விளக்கினுள் மண்எண்ணெயை விட்டபோது அது திடீரெனப் பெருஞ் சத்தத்துடன் வெடித்துச் சிதறியதில் அருகில் நின்ற இரு சிறுமிகள் உயிரிழந்தனர். தாயும், மகளுமாக இருவர் படுகாயமடைந்தனர்.

கம்பர்மலை வன்னிச்சி அம்மன் கோயிலடியில் கடந்த திங்களன்று இரவு 7 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றது.

கோயில் திருவிழாவுக்குச் செல்வதற்காகப் பெரிய தாயாரின் வீட்டில் வந்து தங்கி நின்ற நுணாவிலைச் சேர்ந்த தர்மலிங்கம் சர்வினி (வயது 8), புஸ்பராசா தனுசிகா (வயது 5) ஆகிய இரு சிறுமிகளுமே பலியாகினர்.

கம்பர்மலை வன்னிச்சி அம்மன் கோயிலடியைச் சேர்ந்த கதிர்காம சேகரம் கலாதேவி (வயது 36) அவரது மகளான கதிர்காமசேகரம் காயத்திரி (வயது 14) ஆகிய இருவருமே இச்சம்பவத்தில் படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்னடர்.

குப்பி விளக்கு பெருஞ் சத்தத்துடன் வெடித்ததால் பீதியடைந்த அயலவர்கள் சம்பவம் நடந்த வீட்டுக்குச் செல்லவில்லை என்றும் -

சிறிது நேரத்தின் பின் அருகில் இருந்த முகாமில் இருந்து சென்ற படையினரின் உதவியுடன் காயமடைந்த நிலையில் கிடந்த நால்வரும் மந்திகை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்த நிலையில் எடுத்துச் செல்லப்பட்ட இரு சிறுமிகளும் ஆஸ்பத்திரியில் உயிரிழந்தனர். (ஐ-109)

## மற்றொரு சம்பவத்தில் கணவன்- மனைவி படுகாயம்

எரிந்து கொண்டிருந்த குப்பி விளக்குக்கு மண்எண்ணெய் விட்ட சமயம் அது வெடித்துத் தீப்பற்றிய மற்றொரு சம்பவத்தில் கணவனும் மனைவியும் படுகாயமடைந்தனர்.

கடந்த சனிக்கிழமை இரவு 8.30 மணியளவில் மந்திகை பொது நூலக வீதியில் இச் சம்பவம் இடப்பெற்றது.

மந்திகை மருத்துவமனை ஊழியரான இராசகுமார் [வயது 30)அவரது மனைவியான இராசகுமார் மகேஸ்வரி (வயது 28) ஆகிய இருவருமே இச்சம்பவத்தில் படுகாயமடைந்து மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (ஐ- 109)

## ச. ச. நிலைய சமாசம் அமைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 28

வலி. கிழக்கு பிரதேச சபை சனசமூக நிலையங்களின் சமாசம் இம்மாதம் 6ஆம்திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

பிற்பகல் 3-00மணியளவில் வலி. கிழக்கு பிரதேச சபை செயலாளர் செ. குகதாசன் தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பணக்கூட்டத்தில் சமாசத்திற்கான புதிய உத்தியோகத்தர் தெரிவும் இடம்பெற்றது. (ஐ-5)

## அதிபர்கள் கலந்துரையாடல்

கோப்பாய் கல்விக்கோட்ட அதிபர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமை பி. ப. 1 - 00 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. அதிபர்கள் அனைவரையும் அதில் கலந்து கொள்ளுமாறு கோப்பாய்க் கோட்டக் கல்வி அதிகாரி ஆ. ராஜேந்திரன் கேட்டுள்ளார், (ஐ)

## சிறுவனை பாம்பு தீண்டியது

தேங்காய் எடுத்து வரச் சென்ற சிறுவன் பாம்பினால் கடியுண்ட சம்பவம் கடந்த திங்களன்று வரணி இயற்றாலையில் இடம் பெற்றது,

அதே இடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை மனோகரன் (வயது 14)என்னும் சிறுவனே பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ- 117)

## சஜிந்தவில் மா வந்தது

திருகோணமலையில் இருந்து 'சஜிந்த' கப்பல் மூலம் ஆயிரத்து 950 மெற்றிக் தொன் மா காங்கேசன்துறை துறைமுகத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வந்த இக் கப்பலில் இருந்து மா இறக்கும் வேலைகள் தற்சமயம் நடைபெற்று வருவதாக யாழ்ப்பாண உணவுத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கூறினார். (ஐ–111)

## 4 புளொட் உறுப்பினரையும் விடுவிக்கக் கோரி மனு!

கொழும்பு, ஓக. 28

கிராண்ட்பாஸ் பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள நான்கு புளொட் அமைப்பு உறுப்பினர்களையும் விடுதலை செய்யக்கோரி இன்று நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு தொடரப்படவிருக்கிறது.

கடந்த 20 ஆம் திகதி புளொட் அமைப்பின் உறுப்பினர்களான டேவிட் மரியான் அந்தோனி, அந்தோனிமுத்து கருணாகரன், சின்னத்தம்பி கணேசலிங்கம், ஜெயரட்ணசிங்கம் கோபிநாத் ஆகியோர் வவுனியாவில் இருந்து கொழும்புக்குச் சென்று கொண்டிருந்த சமயம் களனிப் பாலத்தில் வைத்துக் கிராண்ட்பாஸ் பொலீஸாரால் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

''இவர்களின் விடுதலை குறித்து பொலீஸ்மா அதிபர் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஆகியோருடன் தொடர்பு கொண்ட போதும் பலன் கிடைக்காததால் வழக்குத் தாக்கல் செய்ய முடிவு செய்தோம்'' என்று புளொட் அமைப்பின் தலைவர் த. சித்தார்த்தன் 'உதயன்' மட்டக்களப்புச் செய்தியாளருக்கு தெரிவித்தார். [உ-21-3]

## கிளாலிப் பகுதி மீனவர்கள் தொழில் இன்றிப் பாதிப்பு

தென்மராட்சி, ஓக. 28

கிளாலிப் பகுதிக் கடலில் மீன்பிடிப்பது தடை செய்யப்பட்டுள்ளதால் அப் பகுதியில் கடற்றொழிலை நம்பி வாழ்ந்த 85மீனவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கிளாலி கடற்கரையில் இருந்த இவர்களின் வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டதால் இக் குடும்பங்கள் அயற் கிராமங்களிலும் கிளாலியில் உள்ள உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளன.

யாழ். குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் பகல் நேரத்தில் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது போன்று தமது பகுதியிலும் மீன்பிடிக்க அனுமதி வழங்குமாறு இவர்கள் கோரிவருகின்றனர். (ஐ-117)

## சங்கத்தானை சனசமூக நிலையம் சாவகச்சேரி
## பொதுக்கூட்ட அறிவித்தல்

**காலம்:- 31 - 08 - 97 ஞாயிறு**
மாலை 3 மணி

**இடம்:-** சங்கத்தானை சனசமூக நிலைய மண்டபம்.

சகல உறுப்பினர்களும் சமுகம் தரவும். அன்றைய தினம் புதிய உறுப்பினர்களும் சேர்த்துக் கொள்ளப் படுவர்.

க. குணசீலன்,
செயலாளர்.

[49254]

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ். கிளைத்தலைமையகம்
### இலவச ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து பயிற்சி

மேற்படி பயிற்சி இ. செ. ச. சாவகச்சேரிப்பிரிவில் தேசிய பயிலுனர் சபையின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்து ஆசிரியர்—

ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்து சான்றிதழ் உள்ளோர்.

ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்து பயிலுனர்—

16 – 25 வயதுக்குட்பட்ட இரு அமர்வுகளுக்கு மேற்படாத முறையில் ஆங்கில திறமைச் சித்தி, தமிழ் சாதாரண சித்தி, எண்கணிதம்/ வர்த்தக கணிதம்/ கணிதம் சித்தி ஆகியன உள்ளடக்கிய க. பொ. த. (சா. த) இல் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை கீழ்க் காணும் விலாசத்துக்கு 08-09-97-க்கு முன்னதாக அனுப்பி வைத்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சை: சாவகச்சேரி பிரிவுக் காரியாலயத்தில் (மில் றோட், மீசாலை கிழக்கு) 10-9-97 மு. ப. 10-00 மணிக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறும். நேர்முகப் பரீட்சைக்கு வருகை தருவோர் தராதரப் பத்திரங்கள், தகைமைச் சான்றிதழ்கள் ஆகியனவற்றின் மூலப்பிரதிகள் சமர்ப்பித்தல் வேண்டும். இப்பயிற்சி நெறி 14-9-97 இல் ஆரம்பமாகும்.

**கௌரவ செயலாளர்,**
**இ. செ. ச. யாழ். கிளை.**

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
25-08-97

(சி/1413)


**BOSCO INSTITUTE**
25, நக்கா வீதி.

**A/L 99**
புதிய பிரிவு
**புள்ளிவிவரவியல்**
By:
**T. தவசேகர்**
ஆரம்பம்:
**03 - 09 - 1997**
Wed., Fri. 6. 30–7 .30 a. m.

**A/L 98**
**PAPER CLASS**
ஆரம்பம்:
**04 - 09 - 1997**
Tue., Thu. 6.30-7. 30 a. m.
[பழையநேரம்]
(49256)




**புலமைப் பரிசில் 1998**

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு
வகுப்புக்கள்
**30-08-97**
பி. ப. 1. 00 மணிக்கு
ஆரம்பமாகும்.

**BOND INSTITUTES**
58A, Stanley Road,
Jaffna.
[49241]


## நான்காவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்



**28 - 8 - 97**

கரம்பொன் மேற்கு
முருகமூர்த்தி கோயிலடியைச் சேர்ந்த
ரகுபதிசர்மா — கிருஷ்ணவேணி
ரகுபதிசர்மா — மஞ்சுளா
தம்பதியினரின் மகன், மகளான

**★ பிரசாந் - பிரவீணா ★**

தமது நாலாவது பிறந்த நாளை தமது இல்லத்தில் வெகு விமரிசையாக இன்று **28 - 8 - 97** (வியாழக் கிழமை) கொண்டாடுகிறார்கள். இவர்களை தர்சன் அண்ணா, தீபா அக்கா, தீபன் தம்பி, அப்பா, அம்மா, சித்தி ஆகியோர் வாழ்த்துகிறார்கள்.

**வே. ரகுபதிசர்மா,**

ஸ்ரீ முருக மூர்த்தி கோயில்,
கரம்பொன் மேற்கு,
ஊர்காவற்றுறை.

(49252)


**பிரசாந் நகைத் தொழிலகம்**

பருத்தித்துறை தும்பளை வீதியில் இயங்கி வந்த மாணிக்கவாசகம் நகைத்தொழிலகம் தற்பொழுது

**பிரசாந் நகைத் தொழிலகம்**

எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது என்பதை அன்பர் நண்பர்கள், ஆதரவாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

பிரசாந் நகைத் தொழிலகம்

தும்பளை வீதி,
பருத்தித்துறை.

[49250]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுவைதீவில் உவர்நீர் கலப்பதை தடுக்கப் புதிய திட்டம் அமுலாகும்

யாழ்ப்பாணம், ஓக. 28

எழுவைதீவில் தரைக்குக் கீழ் உள்ள நீரில் உவர் நீர் கலப்பதைத் தடுக்கும் திட்டம் ஒன்றை மேற்கொள்ள புதிய முறை ஒன்று அறிமுகஞ் செய்யப்படவிருக்கிறது.

கடல் நீர் மட்டத்துக்குச் சமமாக எழுவைதீவின் கரைப் பகுதிகளில் நிலத்துக்குக் கீழாகப் பொலித்தின் உறை மூலம் தடுப்புக்களை ஏற்படுத்தி கடல் நீர் உள்ளே வராமல் தடுக்கும் வகையில் இத் திட்டம் அமுல் செய்யப்படவிருக்கிறது.

இத்திட்டம் மூலம் எழுவைதீவில் நன்னீரைத் தேக்கி வைத்து விவசாயத் தேவைக்கும், குடிதண்ணீர்த் தேவைக்கும் பயன்படுத்த முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண மீள்குடியமர்வு புனர்வாழ்வு அதிகாரசபையின் மேற்பார்வையில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஐ-3)

# 'குட்வில் கைட்' கப்பல் பயன்படுத்தப்படமாட்டாது

திருகோணமலை, ஓக. 28

திருகோணமலைக்கும் — காங்கேசன்துறைக்கும் இடையில் '' குட்வில் கைட் '' கப்பலை சேவையில் ஈடுபடுத்துவதில்லை என்று கொழும்பில் திங்களன்று நடந்த உயர்மட்ட மாநாட்டில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலைக்கும், காங்கேசன்துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபட தமது கப்பல் தயாராக இருப்பதாக அக்கப்பலின் நிறுவனமான குட்வில் பிறைவேட் நிறுவனம் அறிவித்திருந்தது.

இக்கப்பலைச் சேவையில் ஈடுபடுத்த அனுமதிப்பதில்லை என்று கொழும்பில் நடந்த உயர்மட்ட மாநாட்டில் முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் திருகோணமலைப் பிரதேச செயலகம் தெரிவித்தது.

தென்னாபிரிக்காவின் துறைமுகம் ஒன்றில் தரித்துள்ள கப்பல் ஒன்றை இந்தச் சேவைக்குப் பெறுவது தொடர்பாக அரச மட்டத்தில் ஆராயப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

[உ-3]

# உயர்வகுப்புக்கு 4 பாடங்களே!

கொழும்பு, ஓக. 27

ஜி.சீ.ஈ. (உயர்தர) வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்களுக்குத் தொடர்ந்து முன்னர் போன்று 4 பாடங்களையே கற்பிக்க வேண்டும் என்று கல்வி அமைச்சு அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்கும் அறிவித்துள்ளது.

உயர்தர வகுப்புகளில் அடுத்த வருடத்தில் இருந்து பாட எண்ணிக்கை மூன்றாகக் குறைக்கப்படும் என்று முன்னர் அனுப்பிவைக்கப்பட்டசுற்று நிருபம் தற்போது ரத்து செய்யப்பட்படுள்ளது.

# றிச்சர்ட் பத்திரனவின் பதவி பறிக்கப்படுமா?

கொழும்பு, ஓக. 28

அரசாங்க கட்சிப் பிரதம கொறடா பதவி, கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரனவிடமிருந்து பறிக்கப்பட்டு திட்ட அமுலாக்கல் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேக்கு வழங்கப்படலாம் என அரசாங்க கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் கோரம் இல்லாததால் நாடாளுமன்ற நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்ட வேளையில் பிரதம கொறடாவான அமைச்சர் றிச்சர்ட் பத்திரன உணர்ச்சி வசப்பட்டு அரசாங்கத்துக்கு இக்கட்டான நிலையை உருவாக்கும் விதத்தில் பத்திரிகையாளர்களுக்கு விளக்கம் அளித்ததும் -

அந்த விளக்கம் பத்திரிகைகளில் வெளியானதும் – குறித்து அரசாங்கக் கட்சிக் கூட்டத்தில் கடுமையாக விமர்சிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

# கிளாலியில் நெற்செய்கை இம்முறை இல்லை

கிளாலிப் பகுதியில் படையினரின் முற்றுகைக்கு உட்பட்ட 300 ஏக்கர் நிலப் பரப்பில் இவ்வருடம் காலபோக நெற்செய்கை மேற்கொள்ள முடியாதிருப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

கிளாலி, சம்புவழி, தட்டாம் பள்ளம், தரவைவெளி கோயிலடி ஆகிய இடங்களில் உள்ள வயல்களிலேயே நெற்செய்கை பண்ண முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஐ]

# 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சை: இதுவரை கிடைத்த முடிவுகள்

யாழ்ப்பாணம், ஓக. 28

யாழ். குடாநாட்டில் 1996 இல் நடைபெற்ற 1995 ஆம் ஆண்டுக்கான 5 ஆம் ஆண்டு விசேட புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் அண்மையில் வெளியாகி உள்ளன.

குடாநாட்டில் முதல் பத்து இடங்களைப் பெற்ற மாணவர்களின் விவரமும் அவர்கள் பெற்ற புள்ளிகளும் சஞ்சீவியில் வெளியாகின.

உதயனுக்கு இதுவரை கிடைத்தமற்றும் பாடசாலை முடிவுகள்கீழே தரப்பட்டுள்ளன.(அடைப்புக் குறிக்குள் இருப்பது துஆகக் கூடிய உச்ச புள்ளிகள்)

★ உடுவில் மகளிர் கல்லூரி— 50 பேர் (175 புள்ளிகள்)

★ இராமநாதன் கல்லூரி– 11 பேர் (182 புள்ளிகள்)

★ இணுவில் மத்திய கல்லூரி- 10 பேர் (165 புள்ளிகள்)

★ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை– 8 பேர் (156 புள்ளிகள்)

★ ஏழாலை தெற்கு அ.மி. த. பாடசாலை - 6 பேர் (134 புள்ளிகள்)

★ சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை -5 பேர் (136 புள்ளிகள்)

★ இணுவில் இந்துக்கல்லூரி- 3 பேர் (129புள்ளிகள்)

★ ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை- 3 பேர் (163 புள்ளிகள்)

★ சுன்னாகம் றோ. க. த க. பாடசாலை- 2 பேர் (121 புள்ளிகள்)

★ புன்னாலைக் கட்டுவன் ம. வி,, சங்குவேலி அ. த, க பாடசாலை, மயிலணி சைவ வித்தியாசாலை, தாவடி இந்து வித்தியாலயம், உடுவில் மான்ஸ் ம. வி., உடுவில் அமெ. மி. த. க. பாடசாலை, ஏழாலை சென். இசிதோர் வித்தியாசாலை, மயிலிட்டி றோ. க. பாடசாலை, நடேஸ்வரா கல்லூரி, வசாவிளான் வேலுப்பிள்ளை வித்தி., சுழிபுரம் ஐக்கிய சைவ வித்தி., சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தி., பொன்னாலை வரதராசப் பெருமாள் வித்தி., மூளாய் அ. மி. த. க. பாடசாலை, சங்கரத்தை சின்னம்மா வித்தி., தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தி., தொல்புரம் அ. மி. த. க. பாடசாலை, பிளவத்தை அ. மி. த. க, பாடசாலை, வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் வித்தியாசாலை ஆகியவற்றில் தலா ஒருவர் சித்தியடைந்துள்ளனர்.

★ மகாஜனாக் கல்லூரி– 18 பேர் (156 புள்ளிகள்)

★ தெல்லிப்பழை தந்தை செல்வா வி.— 3 பேர் (128 புள்ளிகள்)

★ விசாலாட்சி வித்தியாலயம்- 2 பேர் (126 புள்ளிகள்)

★ இளவாலை மெய்கண்டான் வித்தி.- 2 பேர் (168 புள்ளிகள்)

★ மல்லாகம் கனிஷ்ட வித்தி.- 2 பேர் (121 புள்ளிகள்)

★ யாழ்ப்பாணக் கல்லூரி - 22 பேர் (160 புள்ளிகள்)

★ அராலி இந்துக்கல்லூரி - 3 பேர் (120 புள்ளிகள்)

★ சுழிபுரம் கிழக்கு அ.மி. த. க. பாடசாலை - 3 பேர் (156 புள்ளிகள்)

★ சங்கானை சிவப்பிரகாச ம. வி - 3 பேர் (144 புள்ளிகள்)

★ மூளாய் சைவப்பிரகாச வித்தி. - 2 பேர் (113 புள்ளிகள்)

★ அராலி சரஸ்வதி மகா வித்தி. - 2 பேர் (152 புள்ளிகள்)

★ பண்ணாகம் மெய்கண்டான் ம. வி. – 2 பேர் (121 புள்ளிகள்)

★ சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தி. - 2 பேர் (157 புள்ளிகள்)

★ வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி – 2 பேர் (146 புள்ளிகள்)

★ மானிப்பாய் சோதி வேம்படி வித்தி. - 11 பேர்

★ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை- 9பேர்

★ மீசாலை வீரசிங்கம் ம. வி. - 11பேர் (167 புள்ளிகள்)

★ கைதடி விக்கினேஸ்வரா வித்தி. – 4 பேர் (155 புள்ளிகள்)

★ அச்சுவேலி மகாவித்தி.- 8 பேர் (146 புள்ளிகள்)

★ அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி-5பேர் (153 புள்ளிகள்)

★ அச்சுவேலி சரஸ்வதி வித்தி. - 2பேர் (110 புள்ளிகள்)

★ ஆவரங்கால் நடராசஇராமலிங்க வித்தி. – 10பேர் (149 புள்ளிகள்)

★ [illegible] மகா வித்தி. - ஒருவர் (14[illegible] புள்ளிகள்) ([illegible])

# சிமெந்து தட்டுப்பாட்டினால் கட்டுமானப் பணி பாதிப்பு

தென்மராட்சிப் பிரதேசத்தில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தினாலும், 'யுனிசெவ்' நிறுவனத்தாலும் மேற்கொள்ளப்படவிருந்த கட்டுமானப்பணிகள் சிமெந்து தட்டுப்பாடு காரணமாக ஆரம்பிக்க முடியாத நிலையில் உள்ளன.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தினால் ஐந்து லட்சம் ரூபா செலவில் மிருசுவில் உசன் சந்தியில் பொது நூல்நிலையம் அமைக்கவும், யுனிசெவ் நிறுவனத்தினால் மிருசுவில் தவசிகுளம் பகுதியில் 26 இலட்சம் ரூபா செலவில் 15 பொதுக்கிணறுகளும் 100 குடும்பங்களுக்கு மலகூடங்களும் அமைக்க நிதி ஒதுக்கியுள்ளபோதிலும் சிமெந்துத் தட்டுப்பாட்டினால் ஏனைய கட்டுமானப்பொருள்கள் தருவிக்கப்பட்டுள்ள நிலையிலும் வேலைகளை ஆரம்பிக்க முடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

# கடல் அட்டை வியாபாரம் பகற் கொள்ளையா?

நயினாதீவில் உள்ள கடற்றொழிலாளரின் பிரதான தொழில் கடல் அட்டை பிடித்தலாகும். இங்குள்ள கடற்படையினர் கடல் அட்டை பிடிப்பதற்கு காலத்திற்கு காலம் அனுமதிக்கின்றார்கள். ஆனால் கடற்றொழிலாளரைப் பாதிக்கும் தேவையற்ற நிபந்தனைகளை விதித்து தொழிலாளர்களின் வயிற்றில் அடிக்கின்றார்கள்.

நயினாதீவில் உள்ள, கடல் அட்டை கொள்வனவு செய்வோரும் இதற்கு உடந்தையாக இருக்கிறார்கள்.

## வாசகர் திருமுகம்

நயினாதீவில் பிடிக்கப்படும் கடல் அட்டை தரமானதாகவுள்ளதால் ஒன்று ரூபா120 வரை விற்கக்கூடியது. அதைப் பதப்படுத்தி விற்றால் இருமடங்கு வருமானம் கிடைக்கும். ஆனால் இங்குள்ள 7பேர் மட்டும் கடல் அட்டையை வாங்கலாம் என்றும், ஒரு கடல் அட்டையின் உச்சவிலை ரூபா 40 எனவும், பதப்படுத்தி விற்கக்கூடாது என்றும் நிபந்தனைகள் கடற்படையினரால் போடப்படுகின்றன. இப்பகுதி மக்களின் உணவுப் பொருள்களுக்குகூட விலைக்கட்டுப்பாடு இல்லாத போது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பொருளான கடல் அட்டைக்கு கட்டுப்பாட்டு விலை விதிப்பதேன்? பதப்படுத்தப்பட்ட 14 கடல் அட்டை சராசரியாக 1கிலோவாகும். தொழிலாளர் தாங்கள் பிடிக்கும் கடல் அட்டையைப்பதப்படுத்தி விற்க யாழ்ப்பாணத்தில் வசதியுண்டு.

| | | |
|---|---|---|
| 1கிலோ கடல் அட்டையின் விற்கும் விலை | | ரூபா: 2300 |
| 1 கிலோ கடல் அட்டை கொள்விலை 14X40 | 560 | |
| 1 கிலோ பதப்படுத்தல் செலவும் ஏனைய செலவும் | 50 | (610) |
| 1 கிலோவுக்கான நிகர லாபம் | | 1,690 |

இது ஒரு பகற் கொள்ளையாகும். 500 கிலோ கடல் அட்டை கொள்வனவு செய்யும் வியாபாரி ரூபா 8,45,000/- லாபம் பெற தொழிலாளர் வறுமையில் வாட வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. நயினாதீவில் உள்ள கடற்றொழில் சங்கம் தனது அங்கத்தவர்களின் கடல் அட்டையைப் பதப்படுத்தி விற்பதற்கு அனுமதி கேட்டும் கடற்படையினர் மறுத்துள்ளனர். சங்க மூலம் விற்பதன் மூலம் முழுப்பயனும் தொழிலாளருக்கு கிடைக்க வழிவகுக்கப்படுகின்றதும் இங்கு கடற்படையினரால் விதிக்கப்படும் நிபந்தனைகள் தங்கள் பாதுகாப்புக்குரிய நிபந்தனைகள் அல்ல.

நீண்டகாலமாக இங்குள்ள கடற்றொழிலாளர்கள் தங்களுக்கு இழைக்கப்படும் அநீதியை வெளிச்சத்திற்கு கொண்டுவரப் பயப்படுகின்றார்கள். இப்பகுதி மக்கள் நாடாளுமன்றத்துக்கு 9 உறுப்பினர்களை அனுப்பினார்கள். அந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது விடயத்தில் தலையிட்டு நியாயம் வழங்கக் கூடாதா?

நயினாதீவு ''நாகநம்பி''

# மின்சார விநியோகமும் வீதி அபிவிருத்தியும்

கொக்குவிலில் இருந்து திருநெல்வேலி, கல்வியங்காடு, செம்மணி ஊடாக கண்டிவீதியைத் தொடுக்கும் வீதி ஆடியபாதவீதி ஆகும். இந்த வீதியின் ஒரு பகுதியான கல்வியங்காட்டுச்சந்தையிலிருந்து நாயன்மார்கட்டு வரை உள்ளவீதியில் மின்சார விநியோகம் இதுவரை கவனிக்கப்படவில்லை. கடந்த வருடம் வீதி திருத்தவேலைகள் ஆரம்பமாவதற்குரிய கல், மண் பறிக்கப்பட்டன. ஒருசில மாதங்களின் பின் அவை வேறுவீதி திருத்துவதற்காக ஏற்றிச்செல்லப்பட்டன. இவ்வீதி மக்கள் போக்குவரத்துக்கு ஏற்றதாக இல்லை. வியாபாரிகள்படும் இன்னல்கள் அதிகம். இதையிட்டு வீதிப்போக்குவரத்துச்சபை கவனம் எடுக்கும் என நம்புகிறேன். அத்துடன் கொக்குவிலில் இருந்து கல்வியங்காட்டுச்சந்தை வரை மின்சார விநியோகத்துக்கு திருத்த வேலை செய்த மின்சாரசபையினர் சுமார் ஒரு கிலோமீற்றர் கொண்ட எஞ்சிய பகுதியில் திருத்த வேலை செய்யவில்லை. இவ்வீதி மாநகரசபைக்கும் கோப்பாய் பிரிவுக்கும் எல்லையாக உள்ளது. நானும் இவ்வீதியில் நிரந்தரமாகக் குடியிருக்கும் ஒருவன் என்ற அடிப்படையில் இவ்விருவிடயங்களும் எப்பொழுதும் புறக்கணிக்கப்பட்டுவருவதையிட்டு மிகவும் மனம் வருந்துகின்றேன். நாங்களும் மாநகரசபைக்கு வரி செலுத்துகிறோம்; மின் கட்டணங்கள் செலுத்துகின்றோம். ஏன் இந்தப் பாகுபாடு என்று புரியவில்லை. இதுதொடர்பாக இந்த வீதியில் குடியிருக்கும் சுமார் 100 குடும்பங்கள் பலமுறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கதைத்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சம்பந்தப்பட்ட அலுவலகங்கள் தக்க நடவடிக்கை எடுத்து வரியிறுப்பாளர்களுக்கு உதவுவார்கள் என நம்புகிறேன்.

க. இராசலிங்கம்

ஆடியபாதம் வீதி, நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


**விற்பனைக்கு**

ஜன்மர் என்ஜின்(30 கோஸ் பவர்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: றியல் வீடியோ வித்தனையடி, உடுப்பிட்டி றோட், வல்வெட்டித்துறை. [சி/1393]

வேம்பு, பூவரசு, இப்பிலிப்பிலி முதலிய விறகுகளும், வைரமான பனைமரங்களும், மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். திருமதி செல்லம்மா, 16/5, சீனியர் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். [49227]

நல்லூர்த்திருவிழாவை முன்னிட்டு செங்கரும்பு மொத்தமாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வை. பேரம்பல மாஸ்ரர், தலையாழி, கொக்குவில். [49234]

**நாடகம்எழுதுவதுஎப்படி?**

என்று விளக்கிக் கூறுகின்ற முதலாவது தமிழ் நூல் அக்கரைச்சீமையில். இலங்கை-இங்கிலாந்து நாவல். மலிவு விலையில் ரூபா 25. அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை. எழுதியவை; பரிசளிப்பதற்கு ஏற்றவை. [49235]

**தவறிவிட்டது**

தங்கப்பதக்கம் ஒன்று சுதுமலை அம்மன் ஆலயத்திற்கும், மூளாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சுகந்தி நகை மாளிகை, மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை என்னும் முகவரியில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். [47392]

மார்க்கண்டன் இளங்கோ என்பவரது இராணுவத்தால் வழங்கப்பட்ட பாஸ், மாணவர்அடையாள அட்டை என்பன நெல்லியடி பிரதான வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வண்ண மாடம், நெல்லியடியில் தயவு செய்து ஒப்படைக்கவும். [49244]

இடைக்காடு அச்சுவேலியைச் சேர்ந்த நாகலட்சுமி சரவணமுத்து என்பவரது விசேட அடையாள அட்டை 26-8-97 அன்று யாழ்ப்பாணத்திற்கும் இருபாலைச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். குகன்கல்வி நிறுவனம், ஆவரங்கால். [49251]

**காணவில்லை**

அளவெட்டி மேற்கு சிவகுமாரி என்பவரது விசேட அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை என்பன யாழ். பஸ் நிலையத்தில் காணாமற் போய்விட்டன. கண்டெடுத்தவர்கள் புனர்வாழ்வுப்பிரிவு, கச்சேரியில் ஒப்படைக்கவும். [49245]

**BOSCO INSTITUTE**

**25, றக்கா வீதி,**

SPOKEN ENGLISH
By:
**BRITTO**
பிரிவு I - 06 - 09 - 97
Sat., Sun. 2-30—3-30

SPOKEN SINHAIA
By:
**தர்சினி**
பிரிவு II - 06- 09 - 97
Sat., Sun. 4 - 5 P.M
(49257)


## வாழ்த்துகின்றோம்

வேலணை கிழக்கு மகாவித்தியாலய
அதிபராகப் பதவியேற்றுள்ள
**திரு. V.A. சிவராஜா**
B.A., B. Phil. Dip. In - Ed.
அவர்களின் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்

**கற்பக விநாயகர் அச்சகம்**
**295/7, கே. கே. எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.** (49220)

## இரண்டாம் ஆண்டு நினைவுத் துயர்த் துளிகள்

### வைத்திலிங்கம் சுந்தரமூர்த்தி

இத்தரையில்: **05 - 06 - 1921**
நித்திரையில்: **28 - 08 - 1995**

ஈராண்டு சென்றாலும் எங்களப்பா நினைவுகள்
நீங்காது மனத்திரையில் நித்தமும் ஓடிடுதே!
தாங்காது தவித்துள்ளம் தற்பரனை நாடிடுதே!
தயவுள்ள தேவனவர் தாராள ஆறுதலே!
நீங்காத நினைவுத் துயர்த்துளிகள்
நின்று போமே எங்கள் வாழ்வினிலே.

பிர. 4:2

கர்த்தருக்குள் ஆறுதலடையும்
உங்கள் மனைவி, பிள்ளைகள், சகோதரி,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

எஸ். மகேசன், மடம் ஒழுங்கை,
திருநெல்வேலி. (49243)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### திருமதி பொன்னம்மா தம்பிராசா

மலர்வு: **19-09-1914**
உதிர்வு: **29-07-1997**

காலத்தின் கோலங்கள் கலையாமல் காத்திடவே
ஆழமாய்க் கால்பதித்து அருமையாய் சுவடு வைத்தீர்
இறப்பானது நிச்சயம் தான் என்பதனை
அறிந்திருந்தும்
தேறவில்லை எம் மனது தேம்பியே அழுகின்றோம்.

எமது அன்புத் தெய்வம் எம்மை விட்டு விண்ணகம் விரைந்த போது எமக்குப் பல வழிகளிலும் உதவிகள் புரிந்தோருக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் மூலம் எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதுடன், 28-08-1997 இன்று வியாழக்கிழமை நடைபெறவிருக்கும் அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

'புனிதவாசம்',
மீசாலை கிழக்கு.
(49247)

## வாழ்த்துகின்றோர்!

யா/வல்வெட்டித்துறை
றோ. க. த. க பாடசாலை

1995 ஆம் ஆண்டுக்கான 5 ஆம் ஆண்டு விசேட புலமைப் பரிசில் பரீட்சையில்

**செல்வன் ஜெயராஜ் ஜெயாகர் - 149 புள்ளிகளும்**
**செல்வி சரவணமுத்து மதுரந்தி - 132 புள்ளிகளும்**

பெற்றுச் சித்தியடைந்துள்ளனர். அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அத்துடன் மிகவும் ஊக்கமளித்துக் கற்பித்த அதிபரையும், ஆசிரியர்களையும் மனமார வாழ்த்துகின்றோம்.

பெற்றோர்,
நலன் விரும்பிகள்.

[சி/1411]

## பாராட்டி வாழ்த்துகிறோம்

யா/ ஆவரங்கால்
நடராஜ இராமலிங்க வித்தியாலயம்

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் தேர்வு – 1995

சித்தியடைந்தோர் விவரம்

| | | |
|---|---|---|
| செல்வன் | K. அருளவன் | 149 புள்ளி |
| செல்வி | P. கனித்தா | 148 புள்ளி |
| செல்வி | P. கோகிலா | 141 புள்ளி |
| செல்வி | J. ஜெயசிறி | 140 புள்ளி |
| செல்வி | K. வினோதினி | 132 புள்ளி |
| செல்வி | S. தவளாங்கி | 127 புள்ளி |
| செல்வன் | R. இராகுலன் | 126 புள்ளி |
| செல்வி | N. திவ்வியா | 113 புள்ளி |
| செல்வி | S. சர்மினி | 110 புள்ளி |
| செல்வி | B. மாதினி | 108 புள்ளி |

இவர்கட்கும் ஆரம்பக் கல்வி ஊட்டிய ஆசிரியர்கட்கும் எமது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

பெற்றோர், பழைய மாணவர்கள்,
யா/ஆவரங்கால் நடராஜ
இராமலிங்க வித்தியாலயம்.

(49246)

## 31 ஆவது தின ஞாபகார்த்த திருப்பலி பூசை



அமரர்
### யோ. பெனடிக்ற் பாலன்

இவரின் வாழ்வுக்காக நன்றித் திருப்பலிப் பூசை 29 – 8 – 97 வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு (புதிய நேரம்) றக்கா வீதியிலுள்ள புனித திரேசாள் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும். இத்திருப்பலியில் பங்கு பற்றுமாறு உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

சகோதரர்களும், குடும்பத்தினரும்.

2/1, மருதடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (சி/1409)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மின்சார அவசரம்!

யாழ்ப்பாணத்திலும் மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது.

இதுவரை மின்சார விநியோகம் கிடைத்தவர்களை, அதனைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு மின்சாரசபையின் வட பிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் வி. இராஜேந்திரன் கேட்டுள்ளார்.

இதுவரை மின்சாரத்தைப் பெறாத குடாநாட்டு மக்களுக்கு அதனை விநியோகிக்கும் பொருட்டே இந்த வேண்டுகோள்.

குடாநாடு முழுவதிலும் இப்போது சுமார் 65,000 குடும்பங்களே வாழ்கின்றன. ஆனால் இதுவரை ஏழாயிரம் குடும்பங்களுக்கு மின்சார வசதி கிடைத்துள்ளது. ஆகக் கூடியது மேலும் மூவாயிரம் குடும்பங்களுக்கே மின்சாரம் விநியோகிக்க முடியும் என்பது அதிகாரிகளின் உத்தேச கணக்கீடு.

சட்ட விரோதமாக மின்சார விநியோகம் பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

மின்னிணைப்பு வழங்கப்படுவதில் பாரபட்சம், செல்வாக்கு என்பன பெரும் பங்கு வகிப்பதாகவும்; சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஓர் ஒழுங்கு முறையைப் பின்பற்றாமல் கோணல் மாணலாகச் செயற்படுவதாக முறைப்பாடுகளும் மலிந்துள்ளன.

குடாநாட்டின் வாழ்க்கை நிலை முற்று முழுதாக இயல்புக்கு வந்துவிட்டதாகக் கருதிச் சிலர் மின்சாரத்தைப்பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்; அதனைப் பற்றியே எழுதிக் கொண்டிருக்கிறார்கள்! விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள்; சில வேளைகளில் சச்சரவுப்படவும் செய்கிறார்கள்.

நகரம், பட்டினம், கிராமம் என்ற வேறுபாடு இன்றி முன்னர் குடாநாடு முழுவதிலும் பரவலாக மின்சார வசதி இருந்தது உண்மையே. அதனால் விவசாயம் மற்றும் சிறு கைத்தொழில்களுக்கும் மின்சாரம் உதவியாக இருந்ததை மறுப்பதற்கில்லை.

அத்தகைய ஒரு முழு அளவு நிலை உடனடியாக ஏற்படும் என்று மக்களில் பலரும் எதிர்பார்க்கிறார்கள் அது சாத்தியமா...? முந்திய முழு அளவு நிலை பல வருடங்களாகப் படிப்படியாகவே எய்தப்பட்டது என்பதனை மறந்துவிடுகிறார்கள். தமக்கும் உடனடியாக மின்சாரம் கிடைக்க வேண்டுமென அவசரப்படுகிறார்கள்.

குடாநாட்டில் முழு அளவில் சிவில் நிர்வாகத்தைக் கொண்டு வந்து மக்களின் அன்றாடத் தேவைகளை நிறைவேற்ற அரசு விரும்பக்கூடும் ஆனால் அதற்கான புறச்சூழல், அரசியல் சூழல் உண்டாகவில்லை என்பதே உண்மை. பலவகைக் கட்டுப்பாடுகள், இடர்கள் மத்தியிலேயே மக்கள் தமது வாழ்க்கையினை ஒரு மாதிரி ஓட்டவேண்டி உள்ளது.

இந்த யதார்த்தத்தை உணராமல் ஒரு சில ஆயிரம் பேர் தமக்கு மின்சாரம் கிடைப்பது சுதந்திரத்துக்கு ஒப்பானது என்பது போல அதற்காக அவசரப்பட்டு ஆகப்போவது என்ன?

வேறுஎல்லாபெரியவிவகாரங்களையும் பின் தள்ளிவிட்டு, குடாநாட்டுக்கு மின்சாரம்வழங்குவது மட்டுந்தானா அரசின் ஒரே ஒரு வேலை......?

எதிலும் மற்றவர்களைவிட முந்திக் கொள்ள வேண்டும் என்று அவசரப்படுவது, சுயநலவசப்படுவது எங்கள் மக்களின் இயல்பாகி விட்டது.

எம்மவரின் இந்தப் போக்கு, சலுகைகள் போதும் உரிமைகளைப்பற்றி அக்கறை இல்லை என்ற எண்ணமுடையோரே நாம் என்று பிறரைக் கணிக்க வைத்துவிடும் அல்லவா!

# தெரிவுக்குழுவின் முடிவுக்குப் பின்பே ஐ.தே.கவின் நிலைப்பாடு வெளிவரும்

## தீர்வுத் திட்டம் குறித்து ரணில் கருத்து

கொழும்பு, ஓக. 28

அரசின் உத்தேச அதிகாரப் பரவலாக்கல் யோசனை தொடர்பாக நாடாளுமன்றத் தெரிவுக் குழு தனது செயற்பாட்டை முடித்த பின்பே ஐ.தே.க. தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்கும்.

இப்படி ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கம் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளில் சிலவற்றை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வரவும் சிலவற்றை சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களிடம் விடவும் நடவடிக்கை எடுக்கிறது.

இந்நிலையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு தனது முடிவைத் தெரிவித்த பின்பே நாம் எமது கட்சியின் முடிவை வெளியிடுவோம் —

இப்படி அவர் மேலும் கூறினார். [இ-150-3]

## துறைமுகத்தில் அடையாள வேலைநிறுத்தம்

கொழும்புத் துறைமுகத் தொழிலாளர்கள் சம்பள உயர்வு உட்பட மற்றும் பல கோரிக்கைகளை முன்வைத்து இன்று நண்பகல் 12 மணிக்கு அடையாள வேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள முடிவு செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-150-3)

## லொத்தர் முறை மூலம்

# இவ்வாண்டு 55 ஆயிரம் பேருக்கு அமெரிக்காவில் குடியேற விஸா!

கொழும்பு ஓக. 28

அமெரிக்கா இந்த ஆண்டு இலங்கை உட்பட 6 பிராந்தியங்களைச் சேர்ந்த நாடுகளுக்கு 55 ஆயிரம் குடியேற்ற விஸாக்களை 'லொத்தர்' மூலம் வழங்கவிருக்கிறது.

எதிர் வரும் ஒக்ரோபர் மாதம் 24 ஆம் திகதி தொடக்கம் நவம்பர் மாதம் 24ஆம் திகதிவரைகுடியேற்ற விஸாக்களுக்கான விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும் என்றும் இந்தக் காலப் பகுதிக்கு முன்னரோ அதன் பின்னரோ அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்றும் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

வாஷிங்டனில் உள்ள தேசிய 'விஸா' நிலையம் வழமையாக இந்த 'லொத்தர் விஸா' திட்டத்தின் கீழ் ஆண்டு தோறும் சுமார் 70 லட்சம் வரையிலான விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்கிறது.

பிரிட்டன், போலந்து தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த 23 ஆயிரத்து 24 பிரஜைகளுக்கும், ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த 21 ஆயிரத்து 409 பிரஜைகளுக்கும், ஆசியாவில் சீனா, தாய்வான், இந்தியா, பிலிப்பைன்ஸ், தென்கொரியா, வியட்னாம் ஆகிய நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளைச் சேர்ந்த 7 ஆயிரத்து இருநூற்றி 54 பிரஜைகளுக்கும் ''லொத்தர்'' விஸாக்கள் வழங்கப்படுகின்றன.

# குறிகாட்டுவானில் பயணிகள் தங்குமிடம் விரைவில் அமைப்பு

புங்குடுதீவுகுறிகாட்டுவான் துறை முகத்தில் நெடுந்தீவு நயினாதீவுப் பிரயாணிகளின் வசதி கருதி புதிய இளைப்பாறும் மடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

ஆண்கள் பெண்களுக்கான கழிப்பறை வசதிகளுடன் கூடியதாக அமைக்கப்படவுள்ள இந்த மடத்திற்கென வேலணை உதவி அரசாங்க அதிபரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து ஆறு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது,

தற்சமயம் நெடுந்தீவு நயினாதீவுப் பிரயாணிகள் தங்கும் இடவசதி குடிதண்ணீர் வசதி இன்றித் துறைமுகத்தில் சிரமங்களை அனுபவித்த பின்னரே தத்தமது இடங்களுக்குச் செல்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-11)

## நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

### நம் தமிழ்த்தேசம் காத்திடு!

நல்லரும் தீயரும் நாடி வந்துனைப் பணிந்தே
நல்லைக் குமரா கந்தா காத்தருளெனக் குளறி நிற்க
வல்ல வள்ளி தேவயானை யுடனருள் முருகா நீயும்
நல் லருள் தந்தே நம்பினோர் நலம் காத்திடுவாயே!

இடம் பெயர்ந்தோம் இடருற்றோம் இன்னு மெத்தனை
தடம்புரண்டோம் தண்டபாணித் தெய்வமே நின்னருள்
வடம் பிடிக்க இங்குற்றோம் வாழ்வு தந்தருள்வாய்!
கடம்பா நம் தமிழ்த்தேசம் காத்திடு தயா நிதியே!

— புத்தூர் விஸ்வம்.

### விடிவருள வா கந்தா!

வீறுகொண்ட சூரனைக் கூறுசெய்த பின்உந்தன்
வேலுக்கு வேலை இல்லையோ! - அது
பேருக்குக் கையில் உளதோ?
ஆறுதலை கொண்டவா, ஆறுதலை வேண்டியே
ஆயிரமாய் அடியார் கூட்டம் - அவர்
மனமெல்லாம் கொண்ட ஏக்கம்
கூறுதமிழ்த் தெய்வமே, கருணையுடன் காக்கவே
காலம் கனிய வில்லையோ - அது
ஔவையுடன் போய் விட்டதோ?
ஏறுமயில் ஏறியே வேலெடுத்து ஓடிவா!
ஏக்கம் துடைத்தருள வா! - தமிழ்
மாந்தர்க்கு விடிவருள வா!

அரியாலை சின்னையா துரைச்சாமி

## கோயில் கிணற்றில் சடலம்

நேற்று முன்தினம் மாலை வீட்டில் இருந்து வெளியே சென்றவர் நேற்றுக் காலை கோயில் கிணறொன்றில் சடலமாகக் காணப்பட்டார்.

புலோலி தெற்கு புற்றளைப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில், அவ்விடத்தைச் சேர்ந்த வைரவப்பிள்ளை சிவகணேசன் [வயது 25] என்பவரே உயிரிழந்தவராவார்.

புற்றளை பிள்ளையார் கோயில் கிணற்றிலேயே இவர் சடலமாகக் காணப்பட்டார். (இ-15)

# பதிவேடுகளைப் பேணுவதுபற்றி அதிபர்களுக்கு விளக்கம்

வலிகாமம் தெற்கு, ஓக. 28

பாடசாலை ஆசிரியர்களுக்கு வழங்கப்பட உள்ள பதிவேடுகளைப் பேணுவது பற்றிய கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

உடுவில், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானைக் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள் இதில் கலந்து கொள்கின்றனர்.

உடுவில், தெல்லிப்பழை பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் காலை 9.00 மணிக்கு இராமநாதன் கல்லூரியிலும் —

சண்டிலிப்பாய், சங்கானை பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் பிற்பகல் ஒரு மணிக்கு மானிப்பாய் மெமோறியல் மகாவித்தியாலயத்திலும் - நடைபெறும்.

கல்வி வலயம் இரண்டின் பிரதிக்கல்விப்பணிப் பாளர் வி. இராசையா, உதவிக்கல்விப்பணிப்பாளர் நா. வரதராசா ஆகியோர் ஆசிரியர் பதிவேடுகள் பேணுதல் சம்பந்தமான விளக்கத்தினை வழங்க உள்ளனர். (இ-152)

## சமய சந்நிதியில்

காரைநகர், கருங்காலி போசுட்டி முருகமூர்த்தி கோயிலின் மஹாகும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 6மணிக்கு விசேட பூசையைத் தொடர்ந்து நடைபெறும்.

நாளைய சிறப்புச் சொற்பொழிவாக ''ஆறுமுகம் ஆன பொருள்'' என்னும் விடயம் பற்றி காரைநகர் இந்துக் கல்லூரி பிரதி அதிபர் பண்டிதர் மு. சு. வேலாயுதபிள்ளை உரையாற்றுவார். (ஐ-4)

★ ★ ★

நெடுந்தீவு புனித யுவானியார் ஆலய திருப்பலித்திருநாள் நாளை வெள்ளிக்கிழமையுடன் முடிவடையும். அன்றையதினம் அறுபது பிள்ளைகளுக்கு மூதன்நன்மை வழங்கப்படும். பங்குத்தந்தை அருட் திரு. மொான்வெட் அடிகள் திருப்பலியை ஒப்புக் கொடுப்பார். (ஐ-111)

★ ★ ★

நெடுந்தீவு புனிதமரி அன்னை ஆலய பெருவிழா எதிர்வரும் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் திருப்பலித் திருவிழா இடம்பெறும். இறுதி நாளன்று திருச்சொரூப சுற்றுப்பிரகாரம் நடைபெறும். (ஐ-111)

★ ★ ★

தும்பளை பெருமாள் அம்பாள் தேவஸ்தானத்தில் இன்று ஆயிரத்தெட்டு சங்குகளால் மகாகும்பாபிஷேகமும் விசேட பூசைகளும் நடைபெறும். விசேட சொற்பொழிவுகளும் இடம்பெறும். [இ-3]

## நாளை

### ஆவணி 13

வெள்ளிக்கிழமை

திதி : துவாதசி
பின் இரவு 1.03 வரை.
நட்சத்திரம் : புநர்பூசம்
முன் இரவு 7.26 வரை.
சுபநேரம்: 6.05-7.35
ராகுகாலம்: 10.35-12.05
(இரவுக்கும் பகலுக்கும் பழைய நேரப்படி)

## தண்ணீரின்றி அலையும் கால் நடைகள்

யாழ். குடாநாட்டில் தற்பொழுது நிலவும் கடும் வெப்பம் காரணமாக குளங்களில் நீர் வற்றிவருகிறது.

மேய்ச்சலுக்குச் செல்லும் கால்நடைகள் தண்ணீர்இன்றி அலைவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-15)

## திருத்த வேலை

நல்லூர், ஓக. 28

கொக்குவில் வைத்திய சாலை விரைவில் திருத்தப்பட உள்ளது. (இ-103)

## சாயி சிந்தனை

இழந்துவிட்ட ஏதோ ஒன்றைத் தேடுவதில் ஒவ்வொருவரும் ஈடுபட்டுள்ளனர். இந்த வாழ்க்கையானது முந்திய பிறவியின் போது இங்கே இழந்துபோய்விட்ட அமைதியையும், ஆனந்தத்தையும் மீண்டும் பெறுவதற்கு ஒருத்தருக்கு அளிக்கப்பட்ட சந்தர்ப்பமாகும். தற்போது அவற்றை மீளவும் பெற்றுவிட்டால் அவர் மீண்டும் வரவேண்டியதில்லை.

அஞ்ஞானத்தினால் அமைதி, ஆனந்தம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை உணராமலும், அவற்றை நிலைபெறச் செய்யும் உபாயம் தெரியாமல் அவற்றை இழந்து நிற்கிறார். சித்தத்தில் 'சிவோஹம்' பொருந்தியிருந்தால் போதும். அதுவே பரம நிறைவாகும். அதாவது. 'நான் சிவம்; நான் அமரத்துவம் பெற்றவன்; பேரானந்தத்தின் ஊற்று மூலம்' என்ற பேருணர்வு வேண்டும்.

தான் யார் என்பதை ஆராய்ந்து இவ்விதம் சரியாக அறிந்து கொள்வதை விடுத்து, அதாவது தனது உள்ளார்ந்த உண்மையை அறிவதை விடுத்து மனிதனானவன் ஆற்றாதவனாய், நிராதரவுற்று, இல்லாமையுற்று, நிலைதளம்பிப்புலம்பித் திரிகிறான். இத்துர்க்கதியிலிருந்து மனிதன் காப்பாற்றப்படல் வேண்டும்.

ஆதாரம்:
Sathys Sai Speaks
Vo. V

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சிலுவையின் ஆலோசனைக்கு இதுவரை சமிக்ஞை எதுவுமில்லை

வவுனியா, ஓக. 28

''திருகோணமலைக்கும்-காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவைக்கு வழித்துணை வழங்குவது தொடர்பாக அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் சில விடயங்களை நாம் தெரிவித்துள்ளோம். அந்த விடயங்களில் இருதரப்பிடம் இருந்தும் சமிக்ஞை கிடைக்கவில்லை.''

செஞ்சிலுவை சர்வதேசக் குழு அதிகாரி ஊர்சுலா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வவுனியாவில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டதையொட்டி நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

நடுநிலைமையாகச் செயற்படும் எமது அமைப்பு இருதரப்பிலும் இணக்கம் ஏற்பட்ட பின்பே எந்த விடயத்திலும் ஈடுபடுவது வழக்கம். அதன்படி இருதரப்பும் இணங்கினால் கப்பல்களுக்கு வழித்துணை வழங்குவோம்.

எமது அமைப்பு தமிழர்களுக்காகவும், விடுதலைப் புலிகளுக்காகவும் செயற்படுவதாக தெரிவிக்கப்படுவதை மறுக்கிறோம்.

தெற்கில் ஜே.வி.பி. பிரச்சினை காலத்தில் அரசுக்கு உதவினோம். இன்று தமிழ் மக்களுக்குப் பிரச்சினை உள்ளதால் அவர்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குகிறோம் —

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-3-164)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில்: 06 -- 05 -- 1932



ஆண்டவன் அடியில்: 29 -- 07 -- 1997

அமரர் கந்தையா இராசையா

திதி:- 1997-08-28

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
எங்களை அன்புடன் அரவணைத்து வாழவைத்த
அன்புத் தெய்வமே! எங்கள் ஆசை அப்பாவே!
உங்கள் திடீர்மறைவு எங்களைத் திகைக்க வைத்தது.
இனி நாம் உங்கள் அன்பு முகம் காண்பதெப்போ?

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

அன்பு மனைவி:- கமலாதேவி.

ஆசை மக்கள்:- சிவனேஸ்வரி [கொக்குவில்], கலாநிதி [வவுனியா], ஸ்ரீதரன், சந்திரவதனா [பிரான்ஸ்], தபேஸ்வரன், தவராசன், சுமதி, சியாதா.

மருமக்கள்:- மகாலிங்கம் [கொக்குவில்], சிவரூபன் [வவுனியா], ஸ்ரீ பால்ராஜா [பிரான்ஸ்]

பேரப்பிள்ளைகள்:- கஜிபன், கபிலன், கஜந்தன், சிவசங்கர், லகிந்தன், பிரசாத், கிரிசாந்.

சகோதரர்கள்:- சிவப்பிரகாசம், சரஸ்வதி, அருணாசலம், மகேஸ்வரி, நடராசா, சிவஞானம், திருநாவுக்கரசு, இராஜேஸ்வரி.

மைத்துனர்கள், மைத்துனிகள்:- செல்லத்துரை, அரியமலர், கிருஸ்ணபிள்ளை, கமலவதனி, சூரியகலா, மல்லிகாதேவி, பரநிருபசிங்கம்.

28-08-1997 இன்று நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள்**

ஏழாலை மேற்கு,
தம்புவத்தை,
ஏழாலை.

(49264)



## மரண அறிவித்தல்

### பொன்னு சரவணமுத்து திவியநேசன்

சாவகச்சேரியைச் சேர்ந்த காலஞ்சென்ற சரவணமுத்து பொன்னு நேசம்மா தம்பதிகளின் அன்புமகன் திவியநேசன் லண்டனில் காலமானார்.

இவர் ஞானசோதியின் அன்புக் கணவரும், ஜ்மைக்கேல், நோஎலா ஆகியோரின் அன்புத் தந்தையும், தயானந்தன், ஞானசீலன் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நடைபெறவுள்ள 30-08-97 அன்று சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு (பழைய நேரம்) அன்னாரது சகோதரனின் இல்லத்தில் ஒரு ஜெபக்கூட்டம் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

35 புகையிரத நிலைய ஒழுங்கை,
சாவகச்சேரி.

(சி/1422)


## அரசிடமுள்ள..

(முதலாம் பக்கத் தொடர்)

றவர் நம்பிக்கையற்ற தன்மையைக் கொண்டிருப்பதால் அரசு விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேச முடியாது. இதனாலேதான் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் அவசியமாகின்றது'' என்றும் ஆயர் இந்தச் சந்திப்பின் போது வலியுறுத்தினார்.

யாழ். குடாநாடு, இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்ததில் இருந்து தற்போது வரை எத்தகைய முன்னேற்றங்களைக் கண்டுள்ளது? என்பது குறித்தும் யாழ். ஆயருடன் இவர்கள் கலந்துரையாடினர்.

யாழ். ஆயர் கருத்துத் தெரிவிக்கையில், யாழ்.குடாநாட்டில் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி உள்ளனர். முக்கியமாக யாழ். குடாநாட்டில் யுத்த நடவடிக்கைகள் காரணமாக 60 சதவீதமான வீடுகள் சேதமடைந்துள்ளன. இளைஞர்கள் பலர் தொழில் வாய்ப்புக்கள்இன்றிக் காணப்படுகின்றனர்.

குடாநாட்டில்அமுலிலுள்ள ஊரடங்குச் சட்டம் காரணமாக மக்கள் சுதந்திரம் அற்ற நிலையில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதாகவே உணர்கின்றனர்.

இராணுவத்தினரின் சென்றிகளில் இறங்கி நடந்துசெல்ல வேண்டி இருப்பது மக்களுக்கு பெரிதும் அசௌகரியங்களை ஏற்படுத்தியுள்ளது.

இப்படி யாழ். ஆயர் தெரிவித்தார்.

குடாநாட்டில் தற்போது மின்சாரவசதி, போக்குவரத்து வசதி மற்றும் வீதிகள் புனரமைப்புச் செய்யப்படுதல் போன்றவையும் மேற்கொள்ளப்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரியது. எனினும் என்னதான் வசதிகள் செய்து தரப்பட்டாலும் மக்கள் நிரந்தரமான சமாதானத்தையே விரும்புகின்றனர் என்றும் யாழ். ஆயர் கூறினார்.

(இ-5)


**எமது இன்றைய வெளியீடு!**

விக்னேஷ், ஈஸ்வரிராவ், சிவகுமார்

**ராமன் அப்துல்லா**

[தரமான பிரதி]

**அடுத்த வெளியீடு**

**பூச்சூடவா**

**சுப்பஸோ வீடியோ.**

யாழ்ப்பாணம்.

[கி/1421]


# 101 ஈழத் தமிழ் அகதிகள் நேற்று தனுஷ்கோடி சென்றடைந்தனர்

## ஒரு படகு தப்பி வந்துவிட்டது

சென்னை, ஓக. 28

101 இலங்கைத் தமிழ் அகதிகள் படகுகளில் நேற்றுத் தனுஷ்கோடி வந்து சேர்ந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அகதிகளை ஏற்றிவந்த இரு பிளாஸ்ரிக் படகுகளில் ஒன்று அகதிகளை இறக்கி விட்டுத் தப்பிச் சென்றதாகவும் —

மற்றைய படகை இந்திய கடற்படை அதிகாரிகள் கைப்பற்றினர் என்றும் —

அகதிகள் அனைவரும் மண்டபம் அகதி முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

[இ-10]

# பாடசாலைகளில் நூலக வாரம்

வலிகாமம் தெற்கு, 28

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை சகல பாடசாலைகளிலும் நூலகவாரம் கொண்டாடப்பட உள்ளது.

ஒவ்வொரு பாடசாலைகளும் இக்காலத்தில் நூலக வாரத்தைக் கொண்டாடி அவை சம்பந்தமான அறிக்கைகளை செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன் தமக்கு அனுப்பி வைக்க வேண்டும் என வடக்கு – கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு செயலாளர் சு. டிவகலாலா அறிவித்துள்ளார்.

ஆரம்பக்கல்வி மாணவர்களிடம் நூலார்வத்தைத் தூண்டவும், கற்பதற்குக் கற்றல் என்ற வகையில் சுயமாகத் தகவல்களைப் படித்தறிந்து கொள்ளும் ஆற்றலை வளர்ப்பதற்கும், மொழி அறிவு, சொல்விருத்தியினை வளர்க்கவும் பாடசாலை நூலகத்தின் பயன்பாடு அவசியமானது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பாடசாலை வாரத்தின் ஒருநாளில் பெற்றோர், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள் தினமாக கொண்டாடி அவர்களிடமிருந்து சிறுவர்களுக்கான நூல்களைச் சேகரித்து அவர்களைப் பாராட்டிக் கௌரவித்தும் -

நூல்களின் பயன்பாடு சம்பந்தமான கருத்தரங்குகளை நடத்தியும் நூலகவாரத்தைக் கொண்டாட பாடசாலைகளில் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

(ஐ-152)

# புதிய கப்பலைப் பெற செஞ்சிலுவை முயற்சி

யாழ்ப்பாணம், ஓக. 28

திருகோணமலைக்கும், காங்கேசன்துறைக்கும் இடையில் நோயாளர் கப்பல் சேவையை நடத்த புதிய கப்பல் ஒன்றைப் பெறும் முயற்சியில் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு ஈடுபட்டுள்ளது.

தற்சமயம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் சேவையும் 50 கடல் மைல் தூரத்தில் நடத்தப்படவேண்டும் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளதையடுத்தே புதிய கப்பலைப்பெற முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் சேவையில் ஈடுபடும் கப்பல் 50 கடல்மைல் தூரத்தில் பயணம்செய்கின்ற போதிலும்,

கப்பலுக்குள் அலைகள் நீரை அள்ளி வீசுவதால் புதிய கப்பல் ஒன்றை சேவையில் ஈடுபடுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு யாழ். அலுவலக அதிகாரி செல்வி ஆன் தெரிவித்தார்.

[இ-3]

## புளியங்குளத்...

(முதலாம் பக்கத் தொடர்)

வானொலி 25 க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதாகவும் —

100 க்கும் மேற்பட்டபடையினர் காயமடைந்ததாகவும்-தெரிவித்தது.

இந்தச் சண்டையின் போது விமானப்படை விமானங்கள், எம். ஐ. 24 ரக ஹெலிக்கொப்டர்கள் ஆகியவற்றின் உதவியுடன் படையினர் புலிகள் மீது எதிர்த் தாக்குதல் நடத்தினர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற சண்டையில் களப்பலியானதாக புலிகளின் குரல் வானொலியில் அறிவிக்கப்பட்ட 10 போராளிகளின் விவரம் வருமாறு:-

கோகுலா [யாழ்ப்பாணம்], லொஜி [கிளிநொச்சி], செந்தா [மன்னார்], கலையரசி [மட்டக்களப்பு], தயாநேசன் [மட்டக்களப்பு], ரூபசிங்கம் [அம்பாறை], நீதியழகன் [அம்பாறை], குட்டிகீரன் [கிளிநொச்சி], நாயகன் [யாழ்ப்பாணம்], கலையரசன் [யாழ்ப்பாணம்].

(இ-3-10-21-164)

## நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 28

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் மேற்கு வீதி, ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் கான கதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா தினமும் மாலை 5-15மணிக்கு நிகழ்த்திவரும் கந்தபுராணம் தொடர் இசைச் சொற்பொழிவில் இன்று ''பானுகோபன் வதம்'' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும்.

(இ-5)

## வடக்கே

(முதலாம் பக்கத் தொடர்)

சமர்ப்பித்தனர்.

யாழ்ப்பாணம் செல்ல கப்பல் வசதி செய்து தருமாறு அவர்கள் தமது மகஜரில் கேட்டிருந்தனர்.

அதேநேரம் — 25 பெண்கள் பிரதேச செயலர் அலுவலகத்தில் அமர்ந்து உண்ணாவிரதம் மேற்கொள்ளப் போவதாகத் தெரிவித்தனர்.

உடனடியாக கப்பல் சேவையை ஆரம்பிக்குமாறு கொழும்பு அதிகாரிகளை வற்புறுத்துமாறு அவர்கள் பிரதேச செயலரிடம் கோரினர்.

[இ-150-3]

## துப்பாக்கிச்சூட்டு...

(முதலாம் பக்கத் தொடர்)

சுமார் 25 அல்லது 30 வயது மதிக்கத்தக்க இந்த இரு பெண்களின் சடலங்களும் இனம் காணும் பொருட்டு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

சடலங்களில் ஒன்றின் அடி வயிற்றிலும், நெஞ்சிலும் மற்றய சடலத்தின் முகம், நெஞ்சு ஆகிய பகுதிகளிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

இனம் காணப்பட்ட சடலமும் மரண விசாரணையின் பொருட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(இ-15)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28-08-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org